# க.பொ.த.உயர்தரம் 2020

## தமிழ் - 72 பகுதி II


க.சந்திரலிங்கம் (SLEAS-III)

உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்)

வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்

பகுதி 11

| | |
|---|---|
| 1.இலக்கணம் | 01X20=20 |
| 2.(அ)சுருக்கம் | 13 புள்ளிகள் |
| (ஆ)கிரகித்தல் | 12புள்ளிகள் |
| 3.கட்டுரை | 25புள்ளிகள் |
| 4.வினா | 5X3(15புள்ளிகள்) |
| 5.வினா | 5X3(15புள்ளிகள்) |
| 6.வினா | 5X3(15புள்ளிகள்) |
| 7.வினா | 7.5X2(15புள்ளிகள்) |
| 8.வினா | அ.2X5(10புள்ளிகள்) |
| | ஆ.5புள்ளிகள் |

1. ஏகாரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.

1) ஏழை　　2) தேவை　　3) பேண்

4) ஏறு　　5) மேளம்　　( 2 )

இ,ஈ,எ,ஏ ஆகிய எழுத்துக்களை அடுத்து ட,ண,ழ,ள, மற்றும் உயிரேறிய றகரம் வந்தால் அவை பின் உயிர்களாகவும் ஏனைய எழுத்துக்கள் வந்தால் சாதரண முன்னுயிராகவும் ஒலிக்கும்

| முன்னுயிர் | பின்னுயிர் |
|---|---|
| இலை | இடபம் |
| ஈரம் | ஈட்டி |
| எத்தனை | எறும்பு |
| ஏற்றம் | ஏணி |
| இனிப்பு | இழை |
| ஈசல் | ஈழம் |
| எலும்பு | எளிமை |

# 2. வெடிப்புரசொலி இடம்பெறும் சொல்.


1) காற்று 2) சாற்று 3) பனை
4) தாமரை 5) படம் ( 2 )

| | ஈரிதழ் ஒலி | பல் ஒலி | உதட்டுப் பல் ஒலி | நுனி அண்ண ஒலி | வளைநா ஒலி | அண்ண ஒலி | கடை அண்ண ஒலி | உர சொலி |
|---|---|---|---|---|---|---|---|---|
| வெடிப்பொலி | ப் | த் | | ற் | ட் | ச் | க் | (ச்) |
| மூக்கொலி | ம் | ந் | | ன் | ண் | ஞ் | ங் | |
| மருங்கொலி | | | | ல் | ழ்.ள் | | | |
| அரை உயிரொலி | | | வ் | | | ய் | | |
| வருடொலி | | | | ர் | | | | |
| ஆடொலி | | | | (ற்) | | | | |

**3.** சொல்லின் இடையில் இரட்டித்து வராத எழுத்துக்கள்.

1) க்,ச் 2) ழ்,ள் 3) ர்,ற்

4) ப்,ம் 5) ர்,ழ் ( 5 )



4. பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரம் இடம்பெற்றுள்ள சொல்.

1) பெண்ணால் 2) மரக்கிளை 3) தராசில்

4) பற்பசை 5) கிளியழகு ( 3 )

1.தோன்றல் விகாரம் - இடையில் ஓரெழுத்துத் தோன்றுதல்

உ-ம்:- பலா + பழம் = பலாப்பழம்

2.திரிதல் விகாரம்:- இடையில் ஓரெழுத்து இன்னோரெழுத்தாக மாற்றம் அடைதல்

உ-ம்:- கடல் + கரை = கடற்கரை

3.கெடுதல் விகாரம்:- இடையில் ஓரெழுத்து இல்லாமல் போதல்

உ-ம்:- மரம் + கிளை = மரக்கிளை

5. வகர உடம்படு மெய் தோன்றிப் புணர்ந்த சொல்.

1)பலாவிலை 2) நிலவில் 3) எலிவால்
4)அவர்கள் 5)கதவால் ( 1 )

உடம்படுமெய்:- நிலை மொழியீற்றில் உயிரும் வருமொழி முதலில் உயிரும் வரும் போது அவ்விரு உயிர்களையும் உடம்படுத்தும் மெய் உடம்படுமெய் ஆகும்.

உ-ம்:- பலா + இலை = பலா<u>**வி**லை</u>

உ-ம்:- தீ + ஐ = தீயை

இது இரண்டு வகைப்படும். யகர உடம்படு மெய், வகர உடம்படுமெய்.

நிலைமொழி ஈற்றில் இ,ஈ,ஐ தவிர்ந்த உயிர்கள் வந்து வருமொழி முதலில் ஏதாவது ஒரு உயிர் வருமாயின் வகரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

**6.** மொழிக்கிறுதியில் இடம்பெறாத எழுத்து.

1. அ    2) ஏ    3) ஐ

4) எ    5) ஓ    ( 4 )

பழந்தமிழில் **எகரம்** மொழிக்கிறுதியில் இடம்பெறவில்லை ஆனால் தற்காலத்தில் **எ,ஒ,ஔ** ஆகிய உயிர்கள் மொழிக்கிறுதியில் இடம் பெறுவதில்லை.

7.“இன்” என்ற இடைநிலை ஏற்று வரத்தக்க வினையடி.

1. போ 2) பார் 3) படி
4) நட 5) சொல் ( 1 )

- இறந்தகால இடைநிலைகளாக த்,ட்,ற்,ன்,இ,இன் ஆகியன பயன்பாட்டில் உண்டு.

**செய்தான் - செய் + த் + ஆன்**

**உண்டான் - உண் + ட் + ஆன்**

**கற்றான் - கல் + ற் + ஆன்**

**போனான் - போ + ன் + ஆன்**

**ஆடியது – ஆடு + இ + அது**

**ஆடினான் - ஆடு + இன் + ஆன்**

**போயினான் - போ + இன் + ஆன்**

8.“விட்டான்” என்ற சொல்லின் சரியான சந்தி பிரிப்பு.

1. விடு + ட் + ஆன் 2) விட்டு + ஆன்

3) விடு + ட் + ட் + ஆன் 4) விடு + ஆன்

5) விட்டு + ட் + ஆன் ( 4 )

பகுதி இரட்டித்து காலம் காட்டுதல்

நிலைமொழி ஈற்றில் குறில் எழுத்தை அடுத்து கு,று,டு வந்து வருமொழி முதலில் ஏதாவது ஓர் உயிர் வருமாயின் அவ்வுகரம் கெட்டு பகுதி இரட்டித்துக் காலம் காட்டும்.

உ-ம்:-

புக்கான் - புகு + ஆன்

பெற்றான் - பெறு + ஆன்

விட்டான் - விடு + ஆன்

9. பின்வருவனவற்றுள் படர்க்கைத் தற்கூட்டுப் பெயர் இடம்பெற்ற வாக்கியம்.

1. அவர்கள் எங்களை அன்போடு உபசரித்தனர்.
2. அவர்கள் உங்களைப் பாராட்டி பேசினர்.
3. அவர்கள் என்னை நம்பியிருக்கிறார்கள்.
4. அவர்கள் நீங்கள் சொன்னால் கேட்பார்கள்.
5. அவர்கள் தங்களைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை.

( 5 )

படர்க்கையில் பேசப்படும் பொருள் தன்னைச் சுட்டி வருமாயின் அது படர்க்கைத் தற்சுட்டுப் பெயர் எனப்படும். இந்த வகையில் தான், தாம், தாங்கள் ஆகிய பெயர்ச் சொற்கள் படர்க்கைத் தற்சுட்டுப் பெயராக வரும்.

உ – ம்:- குருவி தன் குஞ்சுக்கு இரை தேடியது.

10. ஆக்கப் பெயர்களை மட்டும் கொண்ட தொகுதி.

1. படிப்பு, எடுப்பு, கசப்பு
2. சுண்டல், பொரியல், வறுவல்
3. அசட்டுத்தனம், பணப்பெட்டி, பாடுதல்
4. நீளம், காலம், உயரம்
5. கனினி, மூங்கில், பப்படம் ( 2 )

பெயர் அல்லது வினைச் சொற்களுடன் விகுதி சேர்ந்து வருவது ஆக்கப் பெயர் எனப்படும்.

பெயர் + விகுதி = ஆக்கப்பெயர்

முதல் + ஆளி = முதலாளி

வினை + விகுதி = ஆக்கப்பெயர்

உயர் + சி = உயர்ச்சி

11. பின்வருவனவற்றுள் "ஆடு" என்பது வினையாலணையும் பெயராக வந்த தொடர்

1. நேற்று ஆடியது இந்த மயில் தான்.
2. மயில் ஆடியது அழகாக இருந்தது.
3. மயில் நேற்று அழகாக ஆடியது.
4. மயில் ஆடியதை நான் கண்டேன்.
5. நேற்று மயில் ஆடியதை நான் காணவில்லை .

( 1 )

வினையடியாகப் பிறந்து வினை நிகழ்வினையும் நிகழாமையையும் காலத்தையும் கருத்தாவையையும் குறித்து வரும் பெயர்ச் சொல் வினையாலணையும் பெயர் ஆகும்.

உ –ம்:- படித்தவன், படித்தவனை, படித்தவனால், படித்தவனுக்கு……

12. "ஆல்" உருபு காரணப் பொருளில் அமைந்த வாக்கியம்.

1. ஆசிரியர் வெண்கட்டியால் எழுதினார்
2. ஆசிரியரால் பாடம் கற்பிக்கப்பட்டது
3. ஆசிரியர் வந்தால் பாடம் கற்பிக்கப்படும்
4. ஆசிரியர் வந்ததால் பாடம் கற்பிக்கப்பட்டது.
5. ஆசிரியர் கேட்டால் நான் சொல்வேன். ( 4 )

ஆல் உருபு வேற்றுமைப் பொருளிலும் நிபந்தனைப் பொருளிலும் வரும்

ஆல் உருபு ஏற்ற சொல் வினை நிகழ்வதற்கு நிபந்தனைப் படுத்தப்பட்டால் அது நிபந்தனை வாக்கியம் எனப்படும்.

- 13. பின்வருனவற்றுள் அகர வரிசை ஒழுங்கில் அமையாத சொற்தொகுதி.

  1. கலசம், காணிக்கை, கோபுரம், கொக்கு
  2. சிகரம், சேவல், தாமரை, தாவரம்
  3. அகலம், அகாலம், இடபம், ஈசானம்
  4. பாட்டு, பாம்பு, மாதம், மாந்தை
  5. நன்றி, நாய், நாவாய், நிலம் ( 1 )

- அகர வரிசை என்பது தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் எழுதுவது ஆகும்.
- உயிர் எழுத்துக்கள் அ,ஆ,இ,ஈ..............................
- க், ங், ச், ஞ், ட், ண்...............................ற்,ன். என்ற ஒழுங்கில் அமைய வேண்டும்.

14. தன்வினையடியாகவும், பிறவினையடியாகவும் வரத்தக்க வினையடி.

1. உருள் 2) படி 3) எழுது

4) கலை 5) பார் ( 4 )

வினையின் பயன் கருத்தாவைச் சேருவது தன் வினை எனப்படும்.

உ – ம்:- நான் நிலத்தில் உருண்டேன்.

வினையின் பயன் கருத்தாவை அன்றிப் பிறிதொருவரைச் சேருவது பிறவினை எனப்படும்.

உ – ம்:- நான் நிலத்தில் பானையை உருட்டினேன்.

குளவிக்கூடு கலைந்தது. – தன்வினை (கலை)

நான் குளவிக்கூட்டைக் கலைத்தேன் - பிறவினை (கலை)

15. செயப்பாட்டு வினை வடிவத்துக்கு மாற்ற முடியாத வாக்கியம்.

1. கொரோனா மக்களைக் கொன்றது.
2. மருத்துவர் நோயாளிக்கு மருந்து செலுத்தினார்.
3. கொரோனா மக்களின் வாழ்வை விழுங்கியது.
4. கொரோனா தறிகெட்டு ஓடியது.
5. மருத்துவர் கொரோனாவை கட்டுப்படுத்தினர். ( 4 )

செயப்பாட்டு வினை என்பது செய்வினை வாக்கியத்தில் வரும் செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினையைக் குறிக்கும்.

செய்வினை வாக்கியத்தின் பயனிலை படு, உண் போன்ற துணைவினைகளைக் கொண்டு செயப்பாட்டு வினை முற்றுக்களாக மாற்றப்படும்.

**16. “மாணவர்கள் சிலர் பயன்பெற்றனர்” என்ற கருத்துப்படும் வாக்கியம்.**

1) மாணவர்கள் எல்லோரும் பயன்பெற்றனர்.

2) மாணவர்கள் எவரேனும் பயன்பெறாது விடவில்லை.

3) மாணவர்கள் எல்லோரும் பயன்பெறவில்லை.

4) மாணவர்கள் அனைவரும் பயன்பெற்றனர்.

5) மாணவர்கள் ஒருவராவது பயன்பெறவில்லை. ( 3 )

எல்லோரும் பயன்பெற்றனர் எனும்போது அனைவரும் பயன்பெற்றதைக் குறிக்கும். எல்லோரும் பயன்பெறவில்லை எனும் போது சிலர் பயன் பெற்றனர் எனும் அர்த்தத்தில் வந்துள்ளது.

17. “பார்” என்பது துணைவினையாக அமைந்த வாக்கியம்.

1. கற்பித்தலின் போது பல நுட்பங்களைப் பார்த்தேன்.
2. அவன் படம் பார்த்ததைப் பார்த்தேன்.
3. மாணவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.
4. மாணவர்களைத் திருத்துவதற்காக எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன்.
5. பாடசாலைக்குச் சென்று மாணவர்களைப் பார்த்து வந்தேன். ( 4 )

அடிப்படைப் பொருளைத்தரும் வினை முதல் வினையாகும். அடிப்படைப் பொருளையன்றி வேறுபொருளைத் தரும் வினை துணைவினை எனப்படும.

வந்திருந்தேன் - வா- முதல்வினை

இரு- துணைவினை

18. “மாணவர்கள் கற்பதற்கு மிகவும் எளிமையான …” இது ஒரு

1. பெயர்த் தொடர்
2. வினைத் தொடர்
3. பெயரடைத் தொடர்
4. வினையடைத் தொடர்
5. வாக்கியத் தொடர்

( 3 )

பெயர் அடைச் சொல்லைத் தலைமை உறுப்பாக கொண்டமையும் தொடர் பெயரடைத் தொடர் எனப்படும்.

உ – ம்:- இது ஒரு அழகான…

இது மிகவும் உயரமான…

19. பின்வருவனவற்றுள் வினா இடைச் சொல் இடம்பெறும் வாக்கியம்

1. யார் உனக்கு தமிழ்ப் பாடம் கற்பிப்பது?
2. தமிழ் ஏன் உனக்கு விருப்பமான பாடம்?
3. உனக்கு விருப்பமான பாடம் தமிழா?
4. கற்கும் பாடங்களுள் எது உனக்கு விருப்பம்?
5. தமிழ்ப் பாடத்திற்கு உனக்கு எத்தனை புள்ளிகள் கிடைத்தன? ( 3 )

வினாச் சொல் என்பது ஒருசொல்லில் வினா எழுத்து இடம்பெற்று வினாப் பொருளை உணர்த்துவதைக் குறிக்கும். உ – ம்:- யார், எது, ஏன்......

வினா இடைச்சொல் என்பது ஒருசொல்லுடன் வினா எழுத்து இணைந்து வந்து வினாப் பொருளை உணர்த்துவதாகும். உ-ம்:- மரமா?, நானோ?....

20. பின்வருவனவற்றுள் “செய்து” எனும் வாய்ப்பாட்டு வினையெச்ச வடிவத்தால் இணைக்கப்படக்கூடிய முற்று வாக்கியங்களின் தொகுதி.

1. அவன் பாடசாலை செல்வான்: அவன் பாடம் படித்தான்.

2. இந்தப் பாடம் படிப்பதற்கு இலகுவானது: நான் இன்றும் அதைப் படிக்கவில்லை.

3. நான் பாடம் படித்தேன்: தம்பி வினாக்களைக் கேட்டான்.

4. நான் வெளியில் சென்றேன்: நான் முகக் கவசம் அணிவேன்.

5. அம்மா கடைக்குப் போனாள்: அம்மா பொருட்களைக் கொள்வனவு செய்தாள். ( 5 )

ஒரே எழுவாயையும் ஒரே காலத்தையும் உடைய இரண்டு முற்று வாக்கியத் தொடர்களை இணைப்பதற்கு “செய்து” எச்சம் பயன்படுகின்றது.

சுருக்கம் (8 + 5) = 13புள்ளிகள்

50 சொற்களில் எழுதப்பட வேண்டும் 45 தொடக்கம் 55 சொற்களுக்குள் அமையலாம்

சுருக்கம் எழுதும் போது கவனிக்க வேண்டியவை…….

- மையக்கருத்தும் துணைக்கருத்துக்களும் வெளிப்பட வேண்டும்
- மையக்கருத்து சிதையாவண்ணம் எழுதப்பட வேண்டும்
- சொந்த மொழிநடையில் எழுதப்பட வேண்டும்
- ஒருபந்தியில் எழுதப்பட வேண்டும்
- உவமைகள், எடுத்துக்காட்டுக்கள், வர்ணனைகள், உதாரணங்கள்…… தவிர்க்கப்பட வேண்டும்

- **அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**
- தமிழில் பழங்காலத்தில் மொழிபெயர்ப்புக்கள் இருந்தன. பரிபாடல் போன்ற இலக்கியங்கள் வாயிலாகவே பழங்காலத்தில் பாரதம், இராமாயணம் போன்ற கதைகள் வழக்கிலிருந்தமை தெரியவருகிறது. பெருந்தேவனார் பாரதம் முதலிய நூல்கள் பழங்காலத்தில் வழக்கிலிருந்து, பின்னர் மறைந்து போய்விட்டன. ஆகவே பழங்காலத்தில் தமிழில் பெருமளவில் மொழிபெயர்ப்புக்கள் செய்யப்பட்டிருக்கவே வேண்டும். பழங்கால காப்பியங்களான சீவகசிந்தாமணி, பெருங்கதை போன்றவை மொழி பெயர்ப்புக்களே. பௌத்த சமண சமயங்கள் தமிழகத்தில் சங்க காலத்திலேயே பரவிவிட்டமையால் அவற்றின் கொள்கைகள் தமிழில் பெயர்க்கப்பட்டிருந்தன. எனினும் முறையான மொழிபெய்ப்புக்கள் கொள்கை எதுவும் தமிழில் பழங்காலத்தில் இருந்ததாக தெரியவில்லை. தொல்காப்பியர் மொழிபெயர்ப்பு பற்றிக் குறிப்பிடுகின்றார். ஆனால் சுருக்கமாக மொழிபெயர்த்து “அதர்ப்படயாத்தல்” என்று கூறிச் சென்றுவிடுகிறார். அதர்ப்படயாத்தல் என்பதற்கு நெறிப்படியே நூலினை உருவாக்குதல் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் அந்த நெறி என்ன என்பது பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை.
- சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரியபுராணம் தவிர்ந்த தமிழிலுள்ள காப்பியங்கள் அனைத்தும் பிற மொழிக் கதைகளே. இவை பெரும்பாலும் தழுவல்களாகவோ, மொழிபெயர்ப்புக்களாகவோ இருக்கின்றன. பெருங்கதை பிராகிருத வகை மொழியான பைசாசா மொழியில் குணாட்டியர் எழுதிய “பிருஹத் கதா” என்னும் நூலிலுள்ள ஒரு கதையின் மொழிபெயர்ப்பு எனக் கருதப்படுகின்றது. சீவகசிந்தாமணியும் தழுவலாகவே இருக்கக்கூடும். இவற்றைப் பற்றி விரிவான ஆய்வுகள் இல்லை. கம்பர் தமது காப்பியத்தை வால்மீகியைப் பின்பற்றி அமைத்துக் கொண்டதாக அவரே குறிப்பிடுகின்றார். கம்பருடைய “மறுபடைப்பு” என்னும் முறை ஒரு சில சமயங்களில் மட்டும் கம்பருடைய கதை வால்மீகியின் மூலத்தை ஒட்டிச் செல்கிறது. பெரும்பாலன இடங்களில் அவர் சுருக்குதல், விரிவாக்குதல், விளக்கப்படுத்தல், மாற்றுதல், நீக்குதல், சேர்த்தல் போன்ற முறைகளைக் கையாண்டு மூலத்தை மாற்றியிருப்பதால் மூலத்திற்கும் கம்பருடைய நூலுக்குமான வேற்றுமைகள் மிகுதி. உத்தரகாண்டத்தை அடியோடு விட்டுவிட்டார். மேற்கூறிய காரணங்களால் கம்பரது இராமாயணம் ஒரு தனித்தன்மை வாய்ந்த தன்னளவிலான மூலப் படைப்பாகவே ஆராயப்பட வேண்டுமே அன்றி, வான்மீகியின் ஒரு பிரதியாகவோ மாற்றப்பட்ட படைப்பாகவோ அல்ல.

- 02. அ)
- தமிழில் மொழி பெயர்ப்பு பழங்காலத்தில் இருந்து வந்தது.
- ஆரம்ப காலத்தில் இலக்கியங்கள் பல மொழி பெயர்க்கப்பட்டன.
- முறையான மொழி பெயர்ப்புக்கள் ஆரம்ப காலத்தில் இருந்ததாக அறிய முடியவில்லை..
- தொல்காப்பியர் மொழி பெயர்ப்பு பற்றிக் குறிப்பிடுகிறார்.
- பெரும்பாலான தமிழ்க் காப்பியங்கள் பிற மொழிகளின் தழுவல் அல்லது மொழி பெயர்ப்புக்கள் ஆகும்
- கம்பருடைய மொழிபெயர்ப்புக்கள் பெரும்பாலும் மூலநூலில் இருந்து மாறியமைந்திருப்பது சிறப்பாகும்.

ஆ.பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இலக்கிய வகைகள் காலத்திற்கு காலம் மாறக்கூடியவை. "ஒரு சமுதாயம் ஒரு குறித்த காலத்தில் எவ்வகை இலக்கியத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்குமோ?, எவ்வகை இலக்கியத்தைக் கற்று மகிழ்ந்து இன்புறுமோ?, அவ் வகை இலக்கியம் தான் அக்காலத்தில் உண்டாவது இயல்பு." என்று பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை சொல்வதற்கேற்ப காலத்தின் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்பவேஇலக்கியம் பிறக்கின்றது. இவ்வாறு பிறக்கும் இலக்கிய வகைகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் தோன்றிச் செல்வாக்குப் பெறும் இலக்கிய வகைகள் முதல் பிரிவில் அடங்கும். கோவை, உலா, பரணி முதலிய இலக்கிய வகைகள் இவ்வாறு அமைந்தவை. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தோன்றியவையாக இருந்தாலும் காலத்தின் தேவைக் கேற்ப வளைந்து கொடுத்துப் பிற கால கட்டங்களிலும் வாழும் இலக்கிய வகைகள் அடுத்த பிரிவைச் சாரும். இதில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது நாடகம். செய்யுள் இலக்கியம் ஓங்கியிருந்த காலத்தில் செய்யுளிலும், உரைநடை இலக்கியம் ஓங்கியிருந்த காலத்தில் உரைநடையிலுமாகப் பயின்று நாடகம் தனக்கென ஒரு தனித்துவ வரலாற்றைப் படைத்துக் கொண்டுவிட்டது. இந்த அளவிற்கு இல்லையானாலும், தான் செல்வாக்குப் பெற்றுச் சிறந்து நின்ற காலகட்டத்தையும் கடந்து நிற்கும் ஓர் இலக்கிய வகையாகக் காவியம் அமைந்துள்ளது. அதன் உண்மையையுமே இக்காலத்திற்கேற்ப வளைந்து கொடுத்து அது பெற்ற மாற்றங்களையும் "ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்தில" அம் மாற்றம் முழுமை பெற்று நிற்கின்றது.

I.இலக்கியம் எவ்வாறு பிறக்கிறது?

காலத்தின் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்ப இலக்கியம் பிறக்கிறது.

II. முதற் பிரிவில் அடங்கும் இலக்கிய வடிவங்கள் எவை?

கோவை, உலா, பரணி

III. இரண்டாம் பிரிவின் இலக்கியங்கள் எத்தகைய இயல்புடையன?

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தோன்றியவையாக இருந்தாலும் காலத்தின் தேவைகளுக்கேற்ப வளைந்து கொடுத்துப் பிற கால கட்டங்களிலும் வாழும் இலக்கியம்

IV. நாடக இலக்கியம் தனித்துவம் பெற்று விளங்குவதற்கான காரணம் யாது?

செய்யுள் இலக்கியம் ஓங்கியிருந்த காலத்தில் செய்யுளிலும், உரைநடை இலக்கியம் தழைக்கும் காலத்தில் உரைநடையிலுமாகப் பயின்றமை.

V. காவிய இலக்கியத்தின் இயல்பு எத்தகையது?

தான் செல்வாக்குப் பெற்றுச் சிறந்து நின்ற கால கட்டத்தையும் கடந்து நிற்கும் ஓர் இலக்கியம் ஆதலால்

VI. "ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்தில்" என்ற தொடர் பெறும் முக்கியத்துவம் யாது?

காவியம் அதன் உண்மையையும் இக் காலத்திற்கேற்ப வளைந்து கொடுத்து அது பெற்ற மாற்றம் " ஒரு சாதாரண மனிதனது சரித்திரத்தில் அம் மாற்றங்கள் முழுமை பெற்று நிற்பதால்.

- கட்டுரை
- மொத்தம் - 25புள்ளிகள்
- பொருள் - 12புள்ளிகள்
- மொழிநடை - 08புள்ளிகள்
- அமைப்பு - 05புள்ளிகள்
- முகவுரை, உடல், முடிவுரை என்ற அமைப்பில் எழுதப்படல் வேண்டும்.

# அ) தமிழில் பேச்சு வழக்கும் இலக்கிய வழக்கும்

- இவ் இரட்டை வழக்கு பல மொழிகளில் காணப்படுவது
- தமிழில் இரட்டை வழக்கு பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு.
- பேச்சு வழக்கு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும்
- உ + ம் - யாழ்ப்பாண வழக்கு, மட்டக்களப்பு வழக்கு, மலையக வழக்கு
- இயல்பான உணர்வை வெளிப்படுத்த இது உகந்தது.
- உ + ம் - நாட்டார் பாடல்கள்
- ஆக்க இலக்கியங்களில் பேச்சு வழக்கு பயன்படுத்தப்படுதல்
- உ + ம் - சிறுகதை, நாவல் , நாடகம்
- இலக்கிய வழக்கு நியம மொழியாக பிரதேச வேறுபாடற்ற வகையில் வழங்குதல்
- பல்வேறு செய்யுள் உரைநடை ஆக்கங்களுக்கும் இலக்கிய வழக்குப் பயன்படுத்தல்
- தற்கால இலக்கியங்களில் இரு வழக்கும் பயன்படுதல்
- கல்வி அலுவலக ரீதியான விடயங்களுக்கு எப்போதும் இலக்கிய வழக்கே கையாளப்படுதல்.

**ஆ) தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு**

- தமிழ் இலக்கிய வளர்ச்சியில் தொடர்ந்தும் ஆண்களே ஆதிக்கம் செலுத்தி வந்திருப்பினும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பெண்களின் பங்களிப்பும் முக்கியத்துவம் பெற்றிருத்தல்
- சங்க காலம் முதல் தற்காலம் வரை தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பினை அவதானிக்க முடிதல்.
- சங்க காலத்தில் பெண் கவிஞர்கள் அவ்வை அள்ளூர் நன்முல்லையார், நச்செள்ளையார், வெள்ளிவீதியார், ஒக்கூர் மாசத்தியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
- சங்கமருவிய காலத்தில் காரைக்கால் அம்மையாரது பங்களிப்பு........
- பல்லவர் காலத்தில் ஆண்டாள்.......
- பின்னர் 20 நூற்றாண்டு வரை பெண்களின் பங்களிப்பு இன்மை. இதற்கான சமூகப் பின்னனி பற்றிக் குறிப்பிடுதல்
- 20ஆம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் பெண்களின் பங்களிப்பு படிப் படியாக அதிகரித்து வரல் அதற்கான சமூகக் காரணிகள்
- நவீன தமிழ்ப் பெண் கவிஞர்கள்
- சிறுகதை ஆசிரியர்கள்
- நாவலாசிரியர்கள்
- இன்று தமிழ் இலக்கியத்தில் பெண்கள் பெறும் முக்கியத்துவம்

## இ) தொற்று நோய்ப் பரவலும் உலகம் எதிர்கொள்ளும் சவால்களும்

- தொற்று நோய் என்றால் என்ன?
- தொற்று நோய்கள் பற்றிக் குறிப்பிடுக.
- உ+ம் - வைரஸ்நோய், காய்ச்சல், தடிமன்........
- தொற்று நோய் பரவுவதற்கான காரணங்கள்
- தொற்று நோயினால் உலகப் பொருளாதார வீழ்ச்சி, உற்பத்தித்தேக்கம், சுற்றுலாப் பயணிகள் வருகை குறைவு மக்கள் நோய்த் தொற்றுக்கு உள்ளாதல்
- தொற்று நோயை தடுப்பதற்கான வழிமுறைகள்
  உ+ம் - தடுப்பு மருந்து
- மக்கள் மத்தியில் விழிப்புணர்வு
- அரசின் செயற்பாடு
- இன்று உலகை அச்சுறுத்திவரும் தொற்று நோய் நவீன மருத்துவ உலகிற்கு சவாலாக அமைதல்

## ஈ) தமிழ் நாடக வளர்ச்சிக்கு பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் பங்களிப்பு

- அறிமுகம் (வரலாறு சுருக்கமாக கூறல்)
- அவரது தமிழ்ப் பணிகளுள் நாடகப் பணி சிறந்தது.
- நாடக நூல்கள்
- உ + ம் - நானாடகம், இரு நாடகம், சங்கிலி, மாணிக்கமாலை
- முதலிரண்டும் நூல்களும் ஆறு சமூக நாடகங்களைக் கொண்ட தொகுதி
- சங்கிலி நாடகம் வரலாற்று நாடகம்.
- மாணிக்கமாலை நாடகம் மொழி பெயர்த்த நாடகம்.
- இவர் சமூக நாடகம், வரலாற்று நாடகம், மொழிபெயர்ப்பு நாடகம் என மூவகை நாடகத்திற்கும் பங்காற்றியுள்ளார்.
- நாடகங்களில் பேச்சு மொழியை பெரிதும் கையாண்டு எழுதியுள்ளார்.
- இவர் தமிழ் நாடகத்துறையில் செய்த புதுமையாக பேச்சு வழக்கினை புகுத்தியமை அமைகிறது
- இவருடைய பொருளோ பொருள், முருகன் திருகுதாளம், போன்ற நாடகங்களில் கையாண்ட பேச்சு மொழி தனித்தன்மை வாய்ந்தது.
- தான் வாழ்ந்த காலத்து சமூக நிலையை நாடகத்துக்கூடாக கொண்டுவந்தமை
- மேலை நாட்டு நாகரிகம் தமிழ் நாகரிகத்துக்குள் புகுந்த விதத்தை எடுத்துக் காட்டியவர்
- உத்தியோகம் அந்தஸ்து முதலியவற்றால் கலியாணம், சீதனம் முதலியவற்றுள் ஏற்பட்ட மாற்றம் “ பொருளோ பொருள்” நாடகம் மூலம் காட்டப்படுகிறது.

## உ) சமய நல்லிணக்கம்

- பன்மைச் சமூகங்களில் பல சமயங்களைப் பின்பற்றுவோர் காணப்படல்
- பல்வேறு நாடுகளிலும் சமயப் போர்கள் நிகழ்ந்துள்ளமை வரலாற்றுண்மை.
- இன்றும் சமயப் பூசல்கள் காணப்படல்.
- இன்றைய உலகில் சமய நல்லிணக்கத்தின் அவசியம்
- சமயக் கருத்துப் பரிமாற்றமும் புரிந்துணர்வும்
- சமயக் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல்
- வேற்றுமையிலும் ஒற்றுமை காணல் - மண்ணில் நல்ல வண்ணம் வாழ இன்றியமையாதது.
- நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் சமய நிறுவனங்களின் பங்கு

04. அ)சங்க காலத்தில் தோன்றிய பதினெண் மேற்கணக்கு நூல்களை அவற்றின் பொருள் மரபிற்கு ஏற்ப வகைப்படுத்துக.

| அகத்திணை கூறும் நூல்கள் | புறத்திணை கூறும் நூல்கள் |
| --- | --- |
| நற்றிணை | பதிற்றுப்பத்து |
| குறுந்தொகை | புறநானூறு |
| ஐங்குறுநூறு | திருமுருகாற்றுப்படை |
| கலித் தொகை | பெரும்பாணாற்றுப்படை |
| அகநானூறு | சிறுபாணாற்றுப்படை |
| குறிஞ்சிப்பாட்டு | பொருநராற்றுப்படை |
| முல்லைப் பாட்டு | கூத்தராற்றுப்படை |
| பட்டினப் பாலை | மதுரைக்காஞ்சி |

திணைவகுப்பில் கருத்து முரண்பாட்டுக்குரிய நூல்கள்

- நெடுநல்வாடை – அகமா? புறமா? என்று கொள்ளமுடியாதது.
- பரிபாடல் – அகமும் புறமும் விரவிய நூல்

ஆ) சங்க அகத்திணை இலக்கியங்களின் முக்கிய அம்சங்களை துலக்குக.

- அகம் என்றால் என்ன? என்பது பற்றிய விளக்கம்
- அன்பின் ஐந்திணைப் பாடல்கள் (புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதலும் உடன்போதலும்)
- கைக்கிளை, பெருந்திணைப் பாடல்களாக காணப்படுதல்
- முதல், கரு, உரிப் பயன்பாடு
- பாத்திரங்களின் கூற்றாக பாடப்படுதல்
- பெயர்சுட்டாப் பண்பு
- உள்ளுறை, இறைச்சி உவமைப் பயன்பாடு
- களவு, கற்பு எனும் இருநிலைகளில் நோக்கப்படுதல்.

இ) நெடுநல்வாடையை புறத்திணை இலக்கியம் எனக்கொள்வது பொருந்துமா? கருத்துரைக்குக.

- “பொருத்தமானது”
- இது ஒரு புறத்தினை நூல் ஆகும். என்பதற்கு........
- “வேம்பு தலை யாத்த நோன்காழ் எஃகம்” என்ற பாடலடியில் தலைவன் தலைவியரது பெயர் மறைமுகமாக சுட்டிப் பாடப்பட்டமை.
- நெடுநல்வாடையில் தலைவியின் காதல் ஒழுக்கம் விரிவாக பேசப்பட்டாலும் அவ்வாறு பேசுவதற்கு தலைவனின் வீரம் ஆளுமை காரணமாக அமைந்தமை.
- பாண்டியனின் வீரத்தை உணர்த்தும் வாகைத் திணை சார்ந்த பாடலாகக் காணப்பட்டமை.
- “இல்லை” இது ஒரு அகத்திணை நூலாகும்.
- வேம்பு தலையாத்த நோன்காழ் எஃகம்” என்ற பாடலடியில் தலைவன் தலைவியின் பெயர் வெளிப்படையாகக் கூறப்படவில்லை.
- காதலை பிரதான பாடு பொருளாக கொண்டமைந்து காணப்பட்டமை (தலைவியின் காதல் உணர்வு விரிவாக பேசப்பட்டது)

05. அ) விஜய நகர நாயக்கர் கால இலக்கியங்களை வகைப்படுத்துக.

## புராணங்கள்

- திருவிளையாடற் புராணம்
- அரிச்சந்திர புராணம்
- நல்லூர் புராணம்
- சீர்காளத்தி புராணம்
- கூர்ம புராணம்
- திருத்தணிகை புராணம்
- 
- நைடதம், வில்லிபாரதம், காசிக் காண்டம், பிரபுலிங்கலீலை, நமசிவாயலீலை
- **சிற்றிலக்கியங்கள்**

## பரணி

- பாசவதைப் பரணி
- மோகவதைப் பரணி
- அஞ்ஞைவதைப் பரணி

## உலா

- திருவாரூர் உலா
- திருக்காளத்திநாதர் உலா
- மதுரை சொக்கநாதர் உலா
- ஏகாம்பரநாதர் உலா

## கலம்பகம்

- காசிக் கலம்பகம்
- கச்சிக் கலம்பகம்
- தில்லைக் கலம்பகம்
- மதுரைக் கலம்பகம்

## பிள்ளைத் தமிழ்

- மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்
- முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்

## நான்மணிமாலை

- திருவாரூர் நான்மணிமாலை
- நால்வர் நான்மணிமாலை

## மும்மணிக் கோவை

- பண்டார மும்மணிக் கோவை
- சிதம்பர மும்மணிக் கோவை

## தூது

- சிவஞான பாலைய சுவாமிகள் நெஞ்சு விடு தூது

## பொது மக்கள் சார்பான இலக்கியம்

- நொண்டி நாடகம்
- முக்கூடற் பள்ளு
- திருக்குற்றால குறவஞ்சி
- இராம நாடக கீர்த்தனை

## சித்தர் பாடல்கள்

- அகப்பே சித்தர்
- குதம்பைச் சித்தர்
- பாம்பாட்டிச் சித்தர் போன்ற பதினெண்சித்தரது பாடல்கள்

## தனிப்பாடல்

- காளமேகம்
- படிக்காசுப் புலவர்
- இரட்டையர் போன்றோரது பாடல்

## உரை நூல்கள்

- பரிமேலழகர்
- அடியார்க்கு நல்லர்
- நச்சினார்க்கினியார் போன்றோரது உரை நூல்கள்

- **இலக்கண நூல்கள்**
- மாறன் அலங்காரம்
- மாறன் அகப்பொருள்
- பிரயோக விவேகம்
- இலக்கணக் கொத்து

## ஆ) பொதுமக்கள் சார்பான இலக்கியம்

- நொண்டி நாடகம்
- முக்கூடற்பள்ளு
- குற்றாலக் குறவஞ்சி
- இராமநாடக கீர்த்தனை

**பண்புகள்**

- சாதாரண உழவர்கள் மற்றும் குறவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாக கொள்ளுதல்
- பள்ளு, நாடகம், குறவஞ்சி.... முதலான இலக்கிய வடிவங்களைக் கையாண்டு பாடுதல்
- நாடகப் பாங்கு
- இசைப் பாங்கு
- காதலுணர்வு, நகைச்சுவையுணர்வு, அதீதகாமச்சுவை கொண்ட இலக்கியங்களாக காணப்படுதல்
- எளிமையான மொழிநடை
- சமயச் சார்பான கருத்துக்கள் ஜனரஞ்சகப்படுத்தும் செய்யுட்களாக காணப்படுதல்
- பிரச்சினைக்கு முகம் கொடுத்த மக்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் கொடுப்பனவாய் அமைந்தவை

- இ) விஜய நகர நாயக்கர் கால இலக்கியங்கள் முற்கால இலக்கியங்களில் இருந்து வேறுபடும் விதத்தினை சுருக்கமாக விளக்குக.
- 01) சோழர் காலம் - உலகியலும் இறையியலும் முரண்பாடற்ற வகையில் இடம் பெற்றமை
- நாயக்கர் காலம் - சமயச்சார்பு, தத்துவச் சார்பு, பழமை போற்றும் பண்பினைக் கொண்டிருத்தல்
- 02) சோழர் காலம் - காப்பிய நிலைப்பட்ட புராணம்
- நாயக்கர் காலம் - தலபுராணம்
- 03) சோழர் காலம் - பாரிய சிந்தனை தோன்றிமையால் காப்பிய நிலைப்பட்ட இலக்கியம் தோன்றியமை
- நாயக்கர் காலம் - பல்வேறு உதிரியான சிந்தனை தோன்றியமையால் - பல்வேறு தனிப் பாடல்கள்

- 04) சோழர் காலம் - பரணி, உலா, பிள்ளைத் தமிழ் போன்ற சிற்றிலக்கிய வடிவங்கள்
- நாயக்கர் காலம் - பரணி, உலா, பிள்ளைத் தமிழ் போன்ற இலக்கிய வடிவங்கள் தோன்றிலும் அவை சோழர் காலத்தில் இருந்து பெரிதும் வேறுபட்டவையாக அமைந்தமை
- 05) சோழர் காலம் - வாழ்த்துப்பாடல்
- நாயக்கர் காலம் - வசைப் பாடல்
- 06) சோழர் காலம் - விருத்தம்
- நாயக்கர் காலம் - யமம், திரிபு, மடக்கு முதலான சொல்லணிகள்

**06. ஆங்கிலேயரின் வருகைக்கு முந்திய ஈழத்து இலக்கியத்தை மேல்வரும் அம்சங்களின் அடிப்படையில் விளக்குக.**

- **அ) பள்ளு இலக்கியம்**
- **பள்ள நிலத்தில் பயிர் செய்யும் பள்ளர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடும் இலக்கியம் பள்ளு இலக்கியம் ஆகும்.**
- **கதிரைமலைப் பள்ளு**
- **ஞானப் பள்ளு**
- **தண்டிகை கனகராஜன் பள்ளு**
- **பறாளை விநாயகர் பள்ளு**
- **கதிரைமலைப் பள்ளு**
- ஆரியச் சகக்கரவர்த்திகள் காலத்திற்குரியது
- இந்து சமயம் சார்பானது
- கதிர்காமத்தில் உறையும் கந்தனைப்பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது
- ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை
- **ஞானப் பள்ளு**
- போர்த்துக்கேயர் காலத்துக்குரியது
- கிறிஸ்தவ சமயம் சார்பானது
- ஜேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது.

- ஜேசுநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது.
- பிற பிரதேசங்களான ஜெருசலேம், உரோமாபுரியைச் சேர்ந்த பாட்டுடைத் தலைவியர்களாகக் கொண்டது.
- ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை

- **தண்டிகை கனகராஜன் பள்ளு**
- ஒல்லாந்தர் காலத்திற்குரியது
- இந்து சமயம் சார்பானது
- தெல்லிப்பளையூர் செல்வந்தர் கனகராஜ முதலியாரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது.
- மாவை சின்னக்குட்டிப் புலவர் பாடியது
- பாட்டுடைத் தலைவனின் புகழ் மட்டுமன்றி அவரது சுற்றத்தினரது புகழையும் கூறுகின்றது.
- **பறாளை விநாயகர் பள்ளு**
- ஒல்லாந்தர் காலத்திற்குரியது
- சைவ சமயம் சார்பானது
- பறாளையில் உள்ள விநாயகரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது
- நல்லூர் சின்னத்தம்பி புலவரால் பாடப்பட்டது.

- **ஆ) புராண இலக்கியம்**
- **தட்சிண கைலாய புராணம்** :
- திருக்கோணேஸ்வரம் மீது பாடப்பட்டது.
- வடமொழி மச்சேந்திர புராணத்தைத் தழுவியது
- பண்டித ராசாவால் பாடப்பட்டது
- திருக் கரைசை புராணம்
- திருக்கோணமலைக்கு அருகில் உள்ள கரைசை என்னும் இடத்தில் அமைந்துள்ளது. கரைசையம்பதி மீது பாடப்பட்டது.
- ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை
- **வியாக் கிரபாத புராணம்**
- வைத்திய நாத முனிவரால் இயற்றப்பட்டது.
- எமது ஆய்வுக்குக் கிடைக்கவில்லை
- **ஞானானந்த புராணம்**
- போர்த்துக்கேயர் காலத்துக்குரியது என்பர்
- தொம்பிலிபு என்பவரால் இயற்றப்பட்டது
- கிறிஸ்தவ மதம் சார்பானது
- விவிலியத்தின் விளக்கமாக அமைகின்றது
- **சிவராத்திரி புராணம்**
- ஒல்லாந்தர் காலத்திற்குரியது
- வரத பண்டிதரால் இயற்றப்பட்டது.
- சிவராத்திரி விரத மகிமை பற்றிக் கூறுகின்றது.

- **ஏகாதசி புராணம்**
- ஒல்லாந்தர் காலத்திற்குரியது
- வரத பண்டிதரால் இயற்றப்பட்டது.
- ஏகாதசி விரத மகிமை பற்றிக் கூறுகின்றது.
- **யோசேப்பு புராணம்**
- ஒல்லாந்தர் காலத்திற்குரியது
- கூழங்கைத் தம்பிரானால் இயற்றப்பட்டது.
- கிறிஸ்தவ மதம் சார்பானது
- **தேவ அருள் வேத புராணம்**
- ஒல்லாந்தர் காலத்திற்குரியது
- கிறிஸ்தவ சமயம் சார்பானது
- **வலை வீசு புராணம்**
- ஒல்லாந்தர் காலத்திற்குரியது
- சு.முத்துக்குமார் இயற்றியது.

1. இ) தூது, அந்தாதி இலக்கியம்

- **தூது**
- **கிள்ளை விடு தூது**
- காங்கேசந்துறையில் உள்ள கண்ணியவளைப் பதியில் அமைந்த குருநாத சுவாமி(முருகன்) மேல் பாடப்பட்டது.
- கிளியை தூது அனுப்பி பாடப்பட்டது.
- சைவ சமயம் சார்பானது.
- **பஞ்ச வன்னத் தூது**
- இணுவில் சின்னத்தம்பிப் புலவரால் இயற்றப்பட்டது.
- இணுவில் இளந்தாரி கைலாசநாதன் மேல் பாடப்பட்டது.
- ஐந்து வகையான பொருட்களை தூது அனுப்பி பாடப்பட்டது.

- **அந்தாதி**
- **கல்வளை அந்தாதி**
- கல்வளையில் அமைந்திருக்கும் விநாயகர் தலத்தின் மீது பாடப்பட்டது.
- நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டது.
- **மறைசை அந்தாதி**
- திருமறைக் காட்டில் அமைந்துள்ள வேதாரணியேசுவர் மீது பாடப்பட்டது
- நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்டது.
- **புலியூர் அந்தாதி**
- தில்லைச் சிதம்பரத்தின் மீது பாடப்பட்டது.
- மாதகல் மயில்வாகனப் புலவரால் பாடப்பட்டது.

**07) பின்வருவோரில் யாரேனும் இருவர் ஈழத்து தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக.**

**அ) ஆறுமுகநாவலர்**

- உரைநடை வளர்ச்சிக்குப் பங்காற்றியமை – தமிழ் உரைநடையின் தந்தை, வசனநடை கைவந்த வல்லாளர் என அழைக்கப்பட்டமை.
- குறியீடுகளைப் பயன்படுத்தி சொற்களைப் பிரித்துப் பொருள் விளங்கக் கூடியவகையில் கையாண்டார்.
- பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.
- பதிப்புப் பணி – நாவலர் பதிப்பு சுத்தபதிப்பு எனச்சிறப்பிக்கப்பட்டமை.
- பாடநூல் - 1ஆம், 2ஆம், 4ஆம் பாலபாடம்......
- நூலாக்கப் பணி - இலக்கணச் சுருக்கம், இலக்கண வினா விடை.
- நூல்களுக்கு உரை எழுதியமை – நன்னூல் காண்டிகையுரை, கோயிற்புராண உரை.

## ஆ) நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ( 1878 – 1953)

- 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலை சிறந்த புலவர்
- சமயச் சார்புடைய பிரபந்தங்கள் பலவற்றை இயற்றியுள்ளார்.
- உ-ம் - கதிரைச் சிலேடை வெண்பா....................
- தேசிய சமூக உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள்
- சிறுவர்களுக்கான பாடல்கள் - குழந்தைப் பாடல்களை பாடியவர்
- கதைப் பாடல்கள்
- நாடக இலக்கிய ஆக்கம்
- உ-ம் - உயிரிளங்குமரன்
- சிறுவர் செந்தமிழ், நாமகள் புகழ்மாலை, இலங்கை வளம்
- யாழ்ப்பாணப் பண்பாட்டைச் சித்தரிக்கும் இலக்கியம் பாடியவர்
- உ-ம் - தாலவிலாசம்

## இ) பாவலர் துரையப்பா பிள்ளை (1872 – 1928)

- ஈழத்தில் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுக்கு முன்னோடியாக விளங்குபவர்
- சமூகப் பிரச்சினைகளை கவிதைப் பொருளாகக் கொண்டவர்
- பத்திரிகையாளர் 1901 இல் உதயதாரகையின் ஆசிரியராகவும் 1921 இல் இந்து சாதனத்தின் ஆங்கில உதவி ஆசிரியராகவும் கடமையாற்றியவர்
- 1907இல் மாணவர் சஞ்சிகை வெளியிட்டவர்
- பொதுமக்கள் சார்பான கும்மிவடிவம் உ – ம் யாழ்ப்பாண சுவதேசக் கும்மி
- எளிமையான சொற்களை ஆக்க இலக்கியங்களில் பிரயோகித்தார்
- கீதா மஞ்சரி, சகல குணசம்பன்னன் என்ற நாடகம் எழுதியவர்
- பக்திப் பாடல்களை இயற்றியவர்.

## ஈ) சுவாமி விபுலானந்தர்

- வாழ்க்கைப் பின்னனி, பெற்ற பட்டம், பதவிகள், பன் மொழிப் பேராசிரியர், ஆற்றிய பணிகள்
- சுவாமியை ஓர் ஆய்வாளராகவும் கலைஞராகவும் காட்டும் யாழ்நூல், நாடகநூல் - மதங்க சூளாமணி
- "வெள்ளை நிற மல்லிகையோ" போன்ற சிறந்த தனிப் பாடல்களையும், "கங்கையில் விடுத்த ஓலை" போன்ற தொடர் கவிதைகளையும் எழுதியமை.
- மொழி, இலக்கியம், கலை, சமயம், விஞ்ஞானம் தொடர்பாக எழுதிய பல கட்டுரைகள்.
- கலைச்சொல்லாக்கம், ஒப்பியல் நூல்கள்
- தமிழ் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு தொண்டாற்றியமை.
- மொழி பெயர்த்த நூல்கள்

**அ) பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.**

- **காலஞ்சென்ற பேராசிரியர் சு.வித்தியானந்தரின் அப்பாவை எனக்குத் தெரியாது.**

காலம் சென்றது. பேராசிரியர் சு.வித்தியானந்தனா அல்லது அல்லது அவரது அப்பாவா என்பது மயக்கம்

.

**ஆ) பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச் சுட்டிக் காட்டி வழுவற்ற முறையில் திருத்தி எழுதுக.**

- **மாணவர்கள் கல்வி, விளையாட்டு ஆகிய இரு துறைகளிலும் கவனம் செலுத்தும் காலத்திலே தான் அவர்கள் மத்தியில் அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகள் வளர்ச்சியடைந்தது.**

எண் வழு

வளர்ச்சியடைந்தது – வளர்ச்சியடைந்தன.

**இ) பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலையைக் குறிப்பிடுக.**

- “கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டாலும் பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும் என்பதை எனக்கு யாரும் சொல்லவில்லை.
- எழுவாய் - யாரும்
- பயனிலை – சொல்லவில்லை

**ஈ) பின்வரும் வாக்கியங்களை “செய்து” எச்சத்தைப் பயன்படுத்தி. ஒரு தனி வாக்கியமாக எழுதுக.**

- மாணவர்கள் பாடசாலைக்குப் போனார்கள்.
- மாணவர்கள் பாடம் படித்தார்கள்.
- அவர்கள் பரீட்சை எழுதினார்கள்.
- மாணவர்கள் பாடசாலைக்குப் போய் பாடம் படித்து பரீட்சை எழுதினார்கள்

- **எ) பின்வரும் வாக்கியத்தை வழுவற்ற முறையில் திருத்தி எழுதுக.**
- ஒவ்வொரு சொற்களும் இனிமையானது.
- ஒவ்வொரு – என்று வரும் போது சொற்கள் என வராது
- ஒவ்வொரு சொல்லும் இனிமையானது.

**ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.**

**சாரியை**

- பகுதி, விகுதி, இடைநிலை என்பவற்றை இணைக்கப் பயன்படும் ஒரு பகுபத உறுப்பே சாரியை எனப்படும்.
- இதற்குப் பொருள் இல்லை.
- இரண்டு பகுபத உறுப்புக்களை இணைப்பதே இதன் தொழிற்பாடு ஆகும்.
- அத்து, அம், அற்று, இன், அன், போன்ற பல சாரியைகள் தமிழில் உண்டு
- உ-ம் - மரத்தை – மரம் + அத்து = ஐ
- பாட்டினை – பாட்டு + இன் = ஐ

- **தன்வினையும் - பிறவினையும்**
- வினை நிகழ்த்துபவன் தானே வினையின் பயனை அடைவதை தன்வினை என்பர். அதாவது வினையின் பயன் கருத்தாவைச் சேருவதைக் குறிக்கும்
- உ – ம்:- நான் பாடம் படித்தேன்
- தம்பி உணவு உண்டான்
- பிறவினை
- வினை நிகழ்த்துபவன் தானே வினையின் பயனை அடையாமல் பிறிதொருவர் அல்லது பிறிதொன்று வினையின் பயனை அடைவதைக் குறிக்கும் அதாவது வினையின் பயன் எழுவாயை அன்றிப் பிறிதொருவரை ∴ பிறிதொன்றை சேருவதைக் குறிக்கும்
- உ- ம்:- நான் மாணவர்களுக்கு பாடம் படிப்பித்தேன்.
- தம்பி குழந்தைக்கு உணவை ஊட்டினான்.
- சில வினைகள் தன்வினையாகவும் பிறவினையாகவும் வரும்.
- உ-ம் - நனை, ஏரி, முறி, ஓடி, கலை
- தன்வினை- நான் மழையில் நனைந்தேன்.
- பிறவினை- தம்பி துணியை மழையில் நனைத்தான்.

**வினையெச்சம்**

- பால் காட்டும் விகுதி பெறாது எச்சவினை விகுதி பெற்று வினைச் சொற்களைக் கொண்டு நிறைவு பெறும் எச்ச வினை வினையெச்சம் எனப்படும்.
- வினையெச்சம் செய்ய, செய்து, செய்தால் முதலான வாய்ப்பாட்டின் அடியாகப் பிறக்கும்
- உ - ம் - படிக்கப் போகின்றான்
- படித்து முடித்தான்
- படித்தால் தருவான்

# நன்றி